திருப்பூர் வடக்கு மாவட்டத்தில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டங்கள்!

மாவட்ட பொறுப்பாளர், மேயர் ந. தினேஷ்குமார் அறிவிப்பு!

தலைமைக் கழக அறிவிப்பிற்கு இணங்க தமிழ்நாட்டுக்கு திட்டங்களும் இல்லை, அடுப்பு எரிக்க கேஸ் சிலிண்டரும் இல்லை. தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வரும் என்.டி.ஏ. அரசையும், அதன் அடிமைக் கூட்டணியையும் கண்டித்து மத சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் 15.03.2026 ஞாயிற்றுக் கிழமை காலை 10.30 மணியளவில் திருப்பூர் வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட திருப்பூர் வடக்கு மற்றும் அவிநாசி சட்டமன்ற தொகுதிகளில் மத சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் 'மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டங்கள்' கீழ்கண்ட இடங்களில் நடைபெற உள்ளது.

திருப்பூர் வடக்கு சட்டமன்றத் தொகுதி

பகுதி / ஒன்றியம் / பேரூர்	ஆர்பாட்டம் நடைபெறும் இடம்	தலைமை / முன்னிலை
திருப்பூர் வடக்கு ஒன்றியம்	மாகாளியம்மன் கோவில் திடல்	தலைமை திரு. நா. விஸ்வநாதன் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் திரு. ந. தினேஷ்குமார் வடக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் மேயர் – திருப்பூர் மாநகராட்சி திருமதி. செ. உமாமேகஸ்வரி பொதுக்குழு உறுப்பினர் மாநில மகளிரணி பிரச்சாரக்குழு செயலாளர் திரு. கவின் பேச்சாளர்
பாண்டியன் நகர் பகுதி	பாண்டியன் நகர் பேருந்து நிலையம் அருகில்	தலைமை திரு. வெ. ஜோதி பாண்டியன் நகர் பகுதி கழக செயலாளர் திரு. ஈ. தங்கராஜ் வடக்கு மாநகர கழக பொறுப்பாளர் திருமதி. காளீஸ்வரி மாநகர மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர்
வேலம்பாளையம் பகுதி	கோவை டிபார்மெண்டல் ஸ்டோர் அருகில் அனுப்பர்பாளையம்	தலைமை திரு. கொ. ராமதாஸ் வேலம்பாளையம் பகுதி கழக செயலாளர் திருமதி. வெ. உமாமகேஸ்வரி 1–வது மண்டல தலைவர் திருமதி. கௌரி மாநகர மகளிர் அணி அமைப்பாளர்
அண்ணா குடியிருப்பு பகுதி	எஸ்.ஏ.பி. தியேட்டர் சிக்னல்	தலைமை திரு. மின்னல் அ. நாகராஜ் அண்ணா காலனி பகுதி கழக செயலாளர் திரு. க. நடராசன் மாவட்ட அவைத்தலைவர் திரு. பா. குணராஜ் தலைமை செயற்குழு உறுப்பினர் திருமதி. கி. பத்மாவதி 21–வது வார்டு மாமன்ற உறுப்பினர்
கொங்கு நகர் பகுதி	கொங்கு மெயின் ரோடு சின்னச்சாமி அம்மாள் பள்ளி அருகில்	தலைமை திரு. போலார். ரா. சம்பத்குமார் கொங்கு நகர் பகுதி கழக செயலாளர் திரு. தம்பி கோவிந்தராஜ் 2–வது மண்டலத் தலைவர் திருமதி. உமாமகேஸ்வரி மாநகர மகளிர் அணி அமைப்பாளர் திரு. ரஜினி செந்தில் பேச்சாளர்

அவினாசி சட்டமன்றத் தொகுதி

அன்னூர் வடக்கு ஒன்றியம்	ஒட்டர்பாளையம் ஊராட்சி மைதானம்	தலைமை திரு. ந. பழனிசாமி அன்னூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் திருமதி. ராணி செந்தில் மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் திரு. சண்முகம் பொகலூர் கிளை செயலாளர் திரு. பிரசாந்த் ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர்
அன்னூர் தெற்கு ஒன்றியம்	அண்ணா திடல் கணேசபுரம்	தலைமை திரு. மு. தனபாலன் அன்னூர் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் திரு. சேதுபதி ஒன்றிய அவைத்தலைவர் திரு. எம். என். கே. செந்தில் மாவட்ட துணைச் செயலாளர் திரு. தவமணி கணேசன் ஒன்றிய துணைச்செயலாளர் திரு. செல்வராஜ் மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் திரு. யோகேஷ் ஒருங்கிணைப்பாளர்
அன்னூர் பேரூர்	பயணியர் மாளிகை அன்னூர்	தலைமை திரு. மு. ஆர். பரமேஸ்வரன் அன்னூர் பேரூர் கழக செயலாளர் திரு. எட்ராஜ் பேரூர் கழக அவைத்தலைவர் திருமதி. சி. மணி மாவட்ட மகளிரணி துணைத்தலைவர்
சேவூர் ஒன்றியம்	சேவூர் ரவுண்டானா அருகில்	தலைமை திரு. க. பால்ராஜ் சேவூர் ஒன்றிய கழக செயலாளர் திருமதி. சாவித்ரி மாவட்ட மகளிரணி துணை அமைப்பாளர் திரு. பசும்பொன் ரவி பேச்சாளர்
அவிநாசி ஒன்றியம்	ஆட்டையம்பாளையம்	தலைமை திரு. ஈ.ப. சிவப்பிரகாஷ் அவினாசி ஒன்றிய கழக செயலாளர் திரு. சிவசாமி ஒன்றிய அவைத்தலைவர் திருமதி. லட்சுமி ஆதிதிராவிட நலக்குழு துணை அமைப்பாளர் திரு. திருமேணி பேச்சாளர்
அவிநாசி நகரம்	அவினாசி புதிய பேருந்து நிலையம்	தலைமை திரு. திராவிடன் வ. வசந்தகுமார் அவினாசி நகர கழக செயலாளர் திரு. சரவணன் நம்பி தலைமை செயற்குழு உறுப்பினர் திருமதி. சாந்தி மாவட்ட மகளிர் தொண்டர் அணி தலைவர்
திருமுருகன்பூண்டி ஒன்றியம்	தெக்கலூர்	தலைமை திரு. எஸ்.ஆர். பழனிசாமி திருமுருகன்பூண்டி ஒன்றிய கழக செயலாளர் திரு. நடராஜன் மாவட்ட பிரதிநிதி திருமதி. பரிமளம் ஒன்றிய மகளிரணி அமைப்பாளர் திரு. விஜயராஜ் பேச்சாளர்
திருமுருகன்பூண்டி நகரம்	பழைய நகராட்சி அலுவலகம் முன்பு	தலைமை திரு. மூர்த்தி (எ) கிருஷ்ணசாமி திருமுருகன்பூண்டி நகர கழக செயலாளர் திரு. நா. குமார் நகர்மன்றத் தலைவர் திருமதி. எஸ். பரமேஸ்வரி மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர் தகவல் தொழில்நுட்ப அணி

இக்கண்டன ஆர்ப்பாட்டங்களை மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழகச் செயலாளர்கள், திருப்பூர் வடக்கு மற்றும் அவிநாசி சட்டமன்ற தொகுதிகளில் உள்ள மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் அனைவரையும் அழைத்து பேசி முறையாக ஆர்ப்பாட்டம் பற்றி துண்டறிக்கையை அச்சிட்டு அவர்களுடன் இணைந்து நடத்திட வேண்டும். நமது கழக நிர்வாகிகள் மற்றும் கூட்டணிக் கட்சிகளின் நிர்வாகிகள் அனைவரையும் இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்க உரிய ஏற்பாடுகளை செய்து வெற்றிகரமாக இக்கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்திட வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

ந.தினேஷ்குமார் MIB

திருப்பூர் வடக்கு மாவட்ட கழக பொறுப்பாளர், மேயர் - திருப்பூர் மாநகராட்சி

தமிழ்நாட்டில் அதிக அளவில் இலவச வீட்டு மனைப் பட்டா வழங்கியது

முதல்வர் தலைமையில் நடைபெறும் 'திராவிட மாடல்' அரசுதான்!

அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் சிறப்புரை!

திருவள்ளூர், மார்ச்.15- திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்ட மன்ற தொகுதி குட்பட்ட திருநின்றவூர் நகராட்சி வார்டுகளில் 1 கோடி 78 லட்சம் மதிப்பீட்டில் பல்வேறு திட்ட பணிகளை தமிழ்நாடு சிறு பான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு தமிழர் நலத் துறை அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் அடிக்கல் நாட்டு தொடங்கி வைத்தார்

திருநின்றவூர் நகராட்சி 9 வார்டில் 2, 11, 26 ஆகிய வார்டுகளில் 11 சிமெண்ட் சாலை அமைக்கும் பணி, 9 வது வார்டு பிரகாஷ் நகர பகுதியில் 2.00 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல் நிலை நீர் தேக்க தொட்டி அமைக்கும் பணி , 27 வது வார்டு பெரிய காலனி பகுதியில் சமுதாய கழிப்பிடம் அமைக்கும் பணி , இந்திரா நகர 2 ஆழ்துளை கிணறு அமைக்கும் பணிகளை தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளி வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் கலந்து கொண்டு அடிகல் நாட்டி

அப்போது பணிகளை தொடங்கி வைத்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினர் பெரிய காலனி பகுதியில் பொதுமக்கள் வீட்டு மனை பட்டா வழங்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தனர் நிலையில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு உடனடியாக பட்டாக்களை வழங்குவதற்காக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என தெரிவித்தார்

இதனை தொடர்ந்து திருநின்றவூர் நகராட்சி அலுவலகத்தில் வருவாய்த்துறை மற்றும் பேரிடர் மேலாண்மை துறை சார்பில் திருநின்றவூர் நடுகுத்தகை கிராமத்தில் உள்ள 111 பயனாளிகளுக்கு இலவச வீட்டு மனை பட்டாக்களை அமைச்சர் ஆவடி சாமு.நாசர் வழங்கினார்

தமிழகத்தில் இதுவரை திராவிட மாடல் ஆட்சி பொறுப்பு ஏற்றுவதில் இருந்து அதிக அளவில் வீட்டுமனை இலவச பட்டா வழங்கப்பட்டுள்ளது நிலையில் அண்மையில் நடைபெற்ற பொன்னேரியில் திருவள்ளூர் மாவட்டத்திற்கு 86 ஆயிரம் பேருக்கு இலவச வீட்டு மனை பட்டா கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கி இருக்கிறார் அதேபோல் நமது துணை முதல்வர் அவர்கள் ஆவடியில் 38,000 நபர்களுக்கு பட்டா வழங்கி இருக்கிறார் வெள்ளைக்கார ஆட்சியில் இருந்து இதுவரை வழங்கப்படாத பட்டாக்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் பொறுப்பேற்று தமிழ்நாட்டில் உள்ள பட்டாக்கள் வேண்டி மனுக்கள் மீது துரை ரீதியாக நடவடிக்கைகள் எடுத்து இன்றுவரை பட்டாக்கள் வழங்கப்பட்டு வருகிறது குறிப்பாக பெண்களின் பெயர்களில் தான் இன்று வரை இலவச வீட்டுமனை பட்டாக்களை நமது திமுக அரசு வழங்கிக் கொண்டிருக்கிறது கடந்த அதிமுக ஆட்சியில் பட்டா வேண்டி பொதுமக்கள் மனு வழங்கினால் எந்த ஒரு நடவடிக்கைகள் மேற்கொள்ளாமல் கேவலமாக ஆட்சி செய்து கொண்டிருந்தார் இந்த ஆட்சியில் நம் திராவிட மாடல் முதலமைச்சர் சொன்னதையும், சொல்லாததையும் செய்துள்ளார். மகளிர் உரிமைத் தொகையை நிறுத்துவதற்கு ஒன்றிய பாஜக மோடி அரசும் அதற்கு துணை போகும் அதிமுக எடப்பாடி கட்சியும் சதி திட்டம் தீட்டினார்கள். ஆனால் அதை முறியடித்து 3 மாத மகளிர் உரிமைத்தொகை மற்றும் கோடைகால ஊக்கத்தொகை என ரூ. 5 ஆயிரம் வழங்கினார். நமக்கெல்லாம் இன்ப அதிர்ச்சி கொடுத்தார் இதுபோன்ற அற்புதமான நமது முதலமைச்சருக்கு நீங்கள் என்றும் உறுதுணையாக இருக்க வேண்டும் என தெரிவித்தார்

அப்போது பட்டா வழங்கிய பயனாளிகள் தமிழ்நாடு அரசுக்கும் கழகத் தலைவர் முதலமைச்சருக்கும் அமைச்சர் ஆவடி நாசருக்கும் நன்றி தெரிவித்தார்கள்.

நிகழ்ச்சியில் நகர மன்ற தலைவர் உஷாராணி ரவி, நகராட்சி ஆணையர் ஜீவிதா, ஆவடி வட்டாட்சியர் கண்ணன், நகராட்சி பொறியாளர் குமார், நகரச் செயலாளர் தி. வை.இரவி, தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ. ரமேஷ், மாவட்ட பொருளாளர் பா.நரேஷ்குமார், பொதுக்குழு உறுப்பினர் ஜி. விமல்வர்ஷன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கே.சுரேஷ்குமார், நகர மன்ற துணை தலைவர் சரளா நாகராஜ், கவுன்சிலர்கள் நகர நகர நிர்வாகிகள் ரவி, அன்பழகன், குணசேகரன், பி.எல்.ஆர். தேவியோகா, சுரேஷ், பாபு, பூமணி, ஜெயகுமார், உஷாராணி வெங்கடேசன், தங்கராஜ், மு.ப.மகேஷ்குமார், அசோக்குமார், சலிம், வெங்கடேசன், ஜெ.ரவிச்சந்திரன், செந்திவேல், பால்ராஜ், ஜெ.பிரசன்னா, பாட்டனி கார்த்திக், துரை அரசன், திமுக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

மின்வாரிய ஊழியர்களுக்கு 5 ஆண்டுகளில் 2ஆம் முறை ஊதிய உயர்வு!

வரலாற்றுச் சாதனை படைத்த முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி!

மின் கழக தொ.மு.ச. பொதுச் செயலாளர் பா.மணிமாறன் அறிக்கை!

சென்னை, மார்ச்.15- மின்வாரியத்தில் பணிபுரிபவர்களுக்கு 5 ஆண்டுகளில் 2வது முறையாக ஊதிய உயர்வு, மின்வாரிய 69 ஆண்டு கால வரலாற்று சாதனை புரிந்த முதலமைச்சருக்கு நன்றி என மின்கழகத் தொ.மு.ச. பொதுச் செயலாளர் பா.மணிமாறன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள், பொறியாளர்கள் அலுவலர்களுக்கு 5 ஆண்டுகளில் 2வது முறையாக 01.12.2023 முதல் அனைவரும் மனம் மகிழும் வண்ணம் வழங்கிய முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து மின்கழகத் தொ.மு.ச. பொதுச்செயலாளர் பா. மணிமாறன் அறிக்கை விடுத்துள்ளார்.

முத்தமிழறிஞர் வழங்கிய சலுகைகள்!

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாடு முதலமைச்சராக 10.02.1969-ல் பொறுப்பேற்றவுடன், தொழிற்சங்கங்கள், மின்வாரியத் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு வழங்கும்படி கோரிக்கை வைத்தவுடன் அதனை ஏற்று 27.07.1970 அன்று தொழிற்சங்கங்களைத் தன் அறைக்கே அழைத்து பேசி முதன் முதலில் ஊதிய உயர்வை மின்வாரியத் தொழிலாளர்களுக்கு வழங்கினார்கள்.

01.12.1996 ஆம் ஆண்டு முதல் வழங்க வேண்டிய ஊதிய உயர்வை மத்திய அரசு ஊழியர்கள் பெற்ற 40 சதவிகிதம் ஊதிய உயர்வை மின்வாரியத் தொழிலாளர்களுக்கும் வழங்கினார்கள்.

2006-ல் ஐந்தாவது முறை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக பொறுப்பேற்ற பொழுது, 2001-2006 அதிமுக ஆட்சியின் போது ஒரு ஊதிய உயர்வை இழந்த மின்வாரியத் தொழிலாளர்களுக்கு, ஈடுசெய்யும் விதமாக 01.08.2006-ல் 50 சதவிகிதம் அகவிலைப்படியை அடிப்படை ஊதியத்துடன் இணைத்து, இன்னொரு ஊதிய உயர்வைப் போல் மின்வாரியத் தொழிலாளர்களுக்கும் வழங்கியவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.



தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணிபுரிகிறவர்களுக்கு பல சலுகைகளை வழங்கி அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தியவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

முதலமைச்சர் அன்புத்தளபதி வழங்கிய சலுகைகள்!

தமிழ்நாடு முதலமைச்சராக அன்புத்தளபதி அவர்கள் 07.05.2021-ல் பொறுப்பேற்றப் போது மின்வாரியத்தில் கடும் நிதிச் சுமையிலும் மின்வாரியத் தொழிலாளர்களுக்கு உடனுக்குடன் அகவிலைப்படி உயர்வு கருணைத் தொகையுடன் போனஸ், பொங்கல் பரிசு, பணிபுரிபவர்களுக்கும், பணி ஓய்வு பெற்றவர்களுக்கும் பணி பாதுகாப்பு வழங்கிய முத்தரப்பு ஒப்பந்தம் எல்லாவற்றிக்கும் மகுடம் வைத்தது போல், மின்சார வாரியம் பொதுத்துறையாகவே தொடரும் என பல சலுகைகளை வழங்கினார்கள்.

5 ஆண்டுகளில் முதல் ஊதிய உயர்வு!

01.12.2019 முதல் தமிழ்நாடு மின்வாரியத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள், பொறியாளர்கள், அலுவலர்களுக்கு கடந்த அதிமுக ஆட்சியில் வழங்கப்படாமல் இருந்த ஊதிய உயர்வு 10.05.2023 அன்று வழங்கினார்கள். இதில் 6ரூ ஊதிய உயர்வு, 12/2019 முதல் 3/2022 வரை 28 மாதங்களுக்கு ரூ.500/- 01.04.2022 முதல் 31.05.2023 வரை நிலுவைத்தொகை, 01.12.2019 அன்று பத்து ஆண்டுகள் பணிபுரிந்தவர்களுக்கு சர்வீஸ் வெயிட்டேஜ் 3ரூ சதவிகிதம் என அனைவரும் மகிழும் வண்ணம் முதலமைச்சர் அன்புத்தளபதி அவர்கள் வழங்கினார்கள்.

2வது ஊதிய உயர்வு!

01.12.2019-ல் போடப்பட்ட ஊதிய உயர்வு, ஒப்பந்தம் 30.11.2023-ல் முடிவடைந்தவுடன், மின்வாரியத் தொழிலாளர்கள் / பொறியாளர்கள் / அலுவலர்கள் 01.12.2023 ஊதிய உயர்வு பேச்சுவார்த்தைக் குழு அமைக்கப்பட்டு, தமிழ்நாடு அரசு, மின்வாரியம் மற்றும் அனைத்துத் தொழிற் சங்கங்களுடன் பல கட்டப் பேச்சு வார்த்தை நடத்தி, சுமூகமாக இன்று 14.03.2026 மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவின்பேரில் தமிழ்நாடு அரசு, மின்வாரியம் மற்றும் தொழிற்சங்கங்கள் உடனான ஊதிய உயர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதன்மூலம் மின் வாரியத்தில் பணிபுரிகிறவர்களுக்கு,

1. 01.12.2023 முதல் 6 சதவிகிதம் ஊதிய உயர்வு
2. 01.12.2023 முதல் 30.11.2025 வரை (24 மாதங்கள்) ரூ.500/- வீதம் (ஒரே தவணையில் நிலுவைத்தொகை)
3. 01.12.2025 முதல் 28.02.2026 வரை (3 மாதங்கள்) நிலுவைத் தொகையுடன், (ஒரே தவணை)
4. 01.12.2023 முதல் பத்து ஆண்டுகள் பணிமுடித்த தொழிலாளர்கள் / பொறியாளர்கள் / அலுவலர்களுக்கு சர்வீஸ் வெயிட்டேஜ் 3ரூ என அனைவரும் மனம் மகிழும் வண்ணம் வழங்கினார்கள்.

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் அனைத்து பிரிவிலும் 50,000 பேர் பணியிடங்கள் காலியாக இருந்தும் மின்சார வாரியத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள், பொறியாளர்கள், அலுவலர்கள், பேரிடர் காலங்களான கடுமையான புயல், மழை, வெள்ளம் மற்றும் கோடைக் காலங்களில் என அனைத்துப் பருவ நிலை மாற்றங்களிலும் மேலும், 2020 கொரோனா பெருந்தொற்று அலையிலும், 2021 கொரோனா பெருந்தொற்று 2ம் அலையிலும், தன் குடும்பம் / வீடு / மக்களை மறந்து தமிழ்நாடு மக்களுக்கு தடையில்லா மின்சாரம் வழங்க உழைத்தவர்களுக்கு தாயுள்ளத்தோடு, தாயுமானவர் அவர்கள் பல சலுகைகளை வழங்கி கொண்டிருக்கிறார்கள்.

சரித்திர சாதனை நிகழ்த்திய முதல்வர்!

முதலமைச்சர் அன்புத்தளபதி அவர்கள், தமிழ்நாடு மின்சார வாரியம் தொடங்கி 69 ஆண்டு கால வரலாற்றில், முதல்முறையாக தொழிலாளர்கள் / பொறியாளர்கள் / அலுவலர்கள் என 5 ஆண்டுகளில் 2 முறை ஊதிய உயர்வு ஒப்பந்தம் வழங்கி வரலாற்றுச் சாதனை நிகழ்த்தினார்கள்.

வரலாற்றுச் சிறப்பு மிக்க ஊதிய உயர்வினை வழங்கிய தமிழ்நாட்டு மக்களின் நலன் பாதுகாக்கும் திராவிட மாடல் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அன்புத்தளபதி அவர்களுக்கும், மின்துறை அமைச்சர் அவர்களுக்கும், வாரியத் தலைவர் அவர்களுக்கும், ஊதிய உயர்வு குழுத் தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கும், தமிழ்நாடு மின்கழகத் தொமுச சார்பாகவும், அனைத்து மின் வாரியத் தொழிலாளர்கள், பொறியாளர்கள், அலுவலர்கள் சார்பாகவும், எங்களது மனமார்ந்த நன்றிகளை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறேன் என தமிழ்நாடு மின்கழகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்க பொதுச்செயலாளர் பா. மணிமாறன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அனகை முருகேசன் சிறப்புரையாற்றுகிறார்! கேஸ் தட்டுப்பாடு:

குன்றத்தூர் நகரத்தில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

நகரச் செயலாளர் கோ.சத்தியமூர்த்தி வேண்டுகோள்!

காஞ்சிபுரம், மார்ச். 15- குன்றத்தூர் நகரச் செயலாளர் கோ.சத்தியமூர்த்தி விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:- சிலிண்டர் தட்டுப்பாட்டையொட்டி ஒன்றிய அரசையும் அதற்கு துணை போகும் அடிமைக் கூட்டணியையும் கண்டித்து குன்றத்தூர் நகரக் கழக சார்பில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் மாபெரும் ஆர்ப்பாட்டம் குன்றத்தூர் பஜார் சாலையில் இன்று (15.3.2026) காலை 10 மணியளவில் நகரச் செயலாளர் கோ.சத்தியமூர்த்தி தலைமையில் நடைபெறுகிறது.

ஆர்ப்பாட்டத்தில் தே.மு.தி.க. மாவட்ட கழக செயலாளர் அனகை முருகேசன் மற்றும் கூட்டணி கட்சித் தலைவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றுகிறார்கள்.

எனவே கழக நிர்வாகிகள் கூட்டணி கட்சி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் ஆர்ப்பாட்டத்தினை வெற்றி பெற செய்திட வேண்டுமாய் நகரக் கழக செயலாளர் - நகர மன்ற தலைவர் கோ.சத்தியமூர்த்தி கேட்டுக்கொண்டுள்ளார்.

யாக்கூப் சிறப்புரை! கேஸ் தட்டுப்பாட்டை கண்டித்து

மாங்காடு நகரத்தில் மாபெரும் ஆர்ப்பாட்டம்!

நகரச் செயலாளர் பட்டூர் எஸ். ஜெபருல்லா வேண்டுகோள்!

காஞ்சிபுரம்,மார்ச்15- மாங்காடு நகர கழக செயலாளர் - நகர மன்றத் துணைத் தலைவர் பட்டூர் எஸ்.ஜபருல்லா விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:- மாங்காடு நகரக் கழகம் சார்பில் இன்று (15.3.2026 - ஞாயிற்றுக் கிழமை) காலை 10 மணி அளவில் ஒன்றிய பா.ஜ.க. அரசை கண்டித்து மாபெரும் ஆர்ப்பாட்டம் நகர கழக செயலாளர் நகர மன்ற துணைத் தலைவர் பட்டூர் எஸ்.ஜபருல்லா தலைமையில் எஸ். எஸ். கோயில் தெரு பஜார் சாலை மாங்காட்டில் நடைபெறுகிறது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் மனிதநேய மக்கள் கட்சி துணை செயலாளர் யாக்கூப் மற்றும் கூட்டணிக் கட்சி தலைவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகின்றனர்.

எனவே கழக நிர்வாகிகள், வார்டு கழக செயலாளர்கள், அணிகளின் நிர்வாகிகள், கூட்டணி கட்சி கழகத் தோழர்கள், பொதுமக்கள் என அனைவரும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ளுமாறு நகரக் கழக செயலாளர் நகர மன்ற துணைத் தலைவர் பட்டூர் ஜபருல்லா கேட்டுக் கொண்டுள்ளார்.